(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER PREVENTION OF CORRUPTION ACT, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case Number | : | Spl.C.C.No.1/2015 |
| Deposition Of Witness for | : | PW10 |
| Name | : | **திருமதி.S.குணசுந்தரி** |
| Husband's Name | : | திரு.ஜோதிலஷ்மணராஜ் |
| Village | : | காரைக்குடி |
| Taluk | : | காரைக்குடி |
| Calling | : | Sub Registrar Grade-I (Retd) |
| Age | : | 65 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **25th July 2025.**

(1வது எதிரி முன்னிலை, 2வது எதிரி முன்னிலையில்லை, அவர் நீதிமன்றத்தில் முன்னிலையாவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது...... It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை** :

1. நான் தற்போது காரைக்குடியில் குடியிருந்த வருகிறேன். கடந்த 2017-ம் வருடத்தில் காரைக்குடி, சார்பாதிவாளர் நிலை-I ஆக பணியாற்றி பணிஓய்வு பெற்றேன். கடந்த 2010-ம் வருடம் காரைக்குடியில் சார்பதிவாளராக பணியாற்றி வந்தேன். தோட்டக்கலை முன்னாள் உதவி

இயக்குநர் சண்முகசுந்தரம் மற்றும் அவரது மனைவி திருமதி. பாக்கியலட்சுமி, மகள் அகிலாண்டேஸ்வரி, மகன்கள் பார்த்திபன், பகீரதன் ஆகியோர்கள் பெயரில் கடந்த 1994 முதல் 2005 வரை பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணங்களின் நகலை கொடுக்குமாறு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் அவர்கள் என்னிடம் கேட்டுக்கொண்டதற்கிணங்க திருமதி. பாக்கியலட்சுமி, மகள் அகிலாண்டேஸ்வரி, திரு.சண்முகசுந்தரம் ஆகியோர் பெயரில் 1994 முதல் 2005 வரை பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணங்களில் நகலை எடுத்துக் கொடுத்தேன். 23.08.2010 அன்று கிரைய ஆவண உண்மை நகல்கள் என்று சான்றளிக்கப்பட்டு காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, சிவகங்கை அவர்களுக்கு என்னிடம் காண்பிக்கப்படும் கடிதம் மூலம் கொடுத்தேன். அந்த **23.08.2010–ம் தேதியிட்ட கடிதம் அ.த.சா.ஆ–16** என குறியீடு செய்யப்படுகிறது.

2. என்னிடம் காண்பிக்கப்படும் **14.11.1994–ம் தேதி திருமதி. பாக்கியலட்சுமி அவர்களால் கிரையம் பெறப்பட்ட சொத்தின் கிரைய பத்திரம் எண்.1316/1994–ன் உண்மை நகல்** என்னால் சான்றளிக்கப்பட்டது தான். அந்த ஆவணம் **அ.த.சா.ஆ–17** என குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காண்பிக்கப்படும் **21.01.1995–ம் தேதி**

**திருமதி. பாக்கியலட்சுமி அவர்களால் கிரையம் பெறப்பட்ட சொத்தின் கிரைய பத்திரம் எண்.37/1995–ன் உண்மை நகல்** என்னால் சான்றளிக்கப்பட்டது தான். அந்த ஆவணம் **அ.த.சா.ஆ–18** என குறியீடு செய்யப்படுகிறது.

3. என்னிடம் காண்பிக்கப்படும் **14.06.1995–ம் தேதி திருமதி.பாக்கியலட்சுமி அவர்களால் கிரையம் பெறப்பட்ட சொத்தின் கிரைய பத்திரம் எண்.748/1995–ன் உண்மை நகல்** என்னால் சான்றளிக்கப்பட்டது தான். அந்த ஆவணம் **அ.த.சா.ஆ–19** என குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காண்பிக்கப்படும் **18.04.1996–ம் தேதி திருமதி. பாக்கியலட்சுமி அவர்களால் கிரையம் பெறப்பட்ட சொத்தின் கிரைய பத்திரம் எண்.513/1996–ன் உண்மை நகல்** என்னால் சான்றளிக்கப்பட்டது தான். அந்த ஆவணம் **அ.த.சா.ஆ–20** என குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காண்பிக்கப்படும் **30.12.1998–ம் தேதி திருமதி. பாக்கியலட்சுமி அவர்களால் கிரையம் பெறப்பட்ட சொத்தின் கிரைய பத்திரம் எண்.1381/1998–ன் உண்மை நகல்** என்னால் சான்றளிக்கப்பட்டது தான். அந்த ஆவணம் **அ.த.சா.ஆ–21** என குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காண்பிக்கப்படும் **22.04.1999–ம் தேதி திருமதி. பாக்கியலட்சுமி அவர்களால் கிரையம் பெறப்பட்ட சொத்தின்**

**கிரைய பத்திரம் எண்.482/1999-ன் உண்மை நகல்** என்னால் சான்றளிக்கப்பட்டது தான். அந்த ஆவணம் **அ.த.சா.ஆ-22** என குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காண்பிக்கப்படும் **17.05.2001-ம் தேதி திருமதி. பாக்கியலட்சுமி அவர்களால் கிரையம் பெறப்பட்ட சொத்தின் கிரைய பத்திரம் எண்.420/2001-ன் உண்மை நகல்** என்னால் சான்றளிக்கப்பட்டது தான். அந்த ஆவணம் **அ.த.சா.ஆ-23** என குறியீடு செய்யப்படுகிறது.

4. என்னிடம் காண்பிக்கப்படும் **12.07.2001-ம் தேதி திருமதி.அகிலாண்டேஸ்வரி அவர்களால் கிரையம் பெறப்பட்ட சொத்தின் கிரைய பத்திரம் எண்.633/2001-ன் உண்மை நகல்** என்னால் சான்றளிக்கப்பட்டது தான். அந்த ஆவணம் **அ.த.சா.ஆ-24** என குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காண்பிக்கப்படும் **02.03.2005-ம் தேதி திருமதி. பாக்கியலட்சுமி அவர்களால் கிரையம் பெறப்பட்ட சொத்தின் கிரைய பத்திரம் எண்.256/2005-ன் உண்மை நகல்** என்னால் சான்றளிக்கப்பட்டது தான். அந்த ஆவணம் **அ.த.சா.ஆ-25** என குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காண்பிக்கப்படும் **02.03.2005-ம் தேதி திருமதி. பாக்கியலட்சுமி அவர்களால் கிரையம் பெறப்பட்ட சொத்தின் கிரைய பத்திரம் எண்.257/2005-ன் உண்மை நகல்** என்னால்

சான்றளிக்கப்பட்டது தான். அந்த ஆவணம் **அ.த.சா.ஆ–26** என குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காண்பிக்கப்படும் **02.03.2005–ம் தேதி திருமதி. பாக்கியலட்சுமி அவர்களால் கிரையம் பெறப்பட்ட சொத்தின் கிரைய பத்திரம் எண்.258/2005–ன் உண்மை நகல்** என்னால் சான்றளிக்கப்பட்டது தான். அந்த ஆவணம் **அ.த.சா.ஆ–27** என குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காண்பிக்கப்படும் **02.03.2005–ம் தேதி திருமதி. பாக்கியலட்சுமி அவர்களால் கிரையம் பெறப்பட்ட சொத்தின் கிரைய பத்திரம் எண்.259/2005–ன் உண்மை நகல்** என்னால் சான்றளிக்கப்பட்டது தான். அந்த ஆவணம் **அ.த.சா.ஆ–28** என குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காண்பிக்கப்படும் **02.03.2005–ம் தேதி திருமதி. பாக்கியலட்சுமி அவர்களால் கிரையம் பெறப்பட்ட சொத்தின் கிரைய பத்திரம் எண்.260/2005–ன் உண்மை நகல்** என்னால் சான்றளிக்கப்பட்டது தான். அந்த ஆவணம் **அ.த.சா.ஆ–29** என குறியீடு செய்யப்படுகிறது. சொத்துக்களை வாங்குபவர்தான் முத்திரை கட்டணம் மற்றும் பதிவு கட்டணம் செலுத்தவேண்டும். ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, சிவகங்கை ஆய்வாளர் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். (அ.த.சா.ஆ–17 முதல் 20 வரையிலான ஆவணங்கள் சோதனை காலத்திற்கு முன்பு வரக்கூடிய ஆவணங்கள்

என்பதால் எதிரிகள் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனையுடம் குறியீடு செய்யப்படுகிறது.)

**<u>1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. அ.த.சா.ஆ.17 முதல் 29 வரையிலான கிரைய பத்திரங்கள் காரைக்குடி சார் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்ட சமயத்தில் நான் அந்த அலுவலகத்தில் பணிபுரியவில்லை என்றால் சரிதான். அந்த சமயத்தில் பணிபுரிந்த சார்பதிவாளர்கள் யார் யார் அவர்கள் தற்சமயம் எங்கு இருக்கிறார் என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் லஞ்ச ஒழிப்பு பிரிவு போலிசார் வேண்டுகோளின்படி அ.த.சா.ஆ.17 முதல் 29 வரையிலான ஆவணங்களை சான்றொப்பம் இட்டு வழங்கிய சமயத்தில் நான் இணை சார்பதிவாளர் பொறுப்பில்தான் பணிபுரிந்தேன் என்றால் சரிதான். அந்த சமயத்தில் பணிபுரிந்த சார்பதிவாளர் யார் என்றால் தற்சமயம் ஞாபகமில்லை.

2. நான் இந்த ஆவணங்களை போலிசாரிடம் ஒப்படைப்பதற்கு முன்பாக மாவட்ட பதிவாளரிடம் எழுத்து மூலமான ஒப்புதல் பெற்றேனா என்றால் அவ்வாறான நடைமுறை இல்லை. நான் அந்த நடைமுறை இல்லை என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. ஒவ்வொரு காலக்கட்டத்திலும் அரசு வழிகாட்டுதல் மதிப்பிற்கும், சந்தை மதிப்பிற்கும்

வேறுபாடு உண்டு என்றால் சரிதான். சந்தை மதிப்பு கூடுதலாக இருந்தாலும், குறைவாக இருந்தாலும் அரசின் வழிகாட்டுதல் மதிப்பீட்டின்படிதான் முத்திரைத்தாள் மற்றும் பதிவு கட்டணம் வசூல் செய்யப்படும் என்றால் சரிதான். ஆகவே, அ.த.சா.ஆ.17 முதல் 29 வரையிலான ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள கிரையத்தொகை அந்த சொத்தின் உண்மையான சந்தை மதிப்பாக இருப்பதற்கு வாய்ப்பில்லை என்றால் அரசு வழிகாட்டுதல் மதிப்பு தான் அதில் குறிப்பிடப்படும். அ.த.சா.ஆ–17 முதல் 29 வரையிலான ஆவணங்களை கோரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு போலிசார் எனக்கு வழங்கிய கடிதத்தினை போலிசார் விசாரணையின்போது நான் கொடுத்தேனா என்றால் இல்லை. அது எங்கள் அலுவலகத்தில் கோப்பில் உள்ளது. காரைக்குடி இணை சார்பதிவாளராக பணிபுரியும் நபரிடம் மேற்படி ஆவணங்களை கேட்டுப்பெறாமல் பொறுப்பு சார்பதிவாளராக பணியாற்றிய என்னிடம் மேற்படி ஆவணங்கள் பெறப்பட்டுள்ளது என்றால் நான் கூடுதல் பொறுப்பில் இருந்ததால் அந்த ஆவணங்களை வழங்கினேன். அ.த.சா.ஆ–17 முதல் 20 வரையிலான கிரைய ஆவணங்கள் 01.01.1998–ம் ஆண்டிற்கு முன்பு பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரிதான்.

அ.த.சா.ஆ–17 முதல் 20 வரையிலான கிரைய ஆவணங்களின் முத்திரை தாள் கட்டணம் மற்றும் பதிவு கட்டணம் ரூ.49,130/– என்றால் சரிதான்.

**மறுவிசாரணை :** இல்லை.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct"

ANITHACHRISTY J

Digitally signed by ANITHACHRISTY J
Date: 2025.07.25 18:02:47 +0530

**Special Judge,**
P.C.ACT Cases,
Sivagangai.